மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 55, திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

55—

பொள்ளாச்சியில் மூன்றாவது குடிநீர் திட்டத்தைத் துரிதப் படுத்தல்

*20101—திரு. வி. பி. சந்திரசேகர் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நகருக்குக் குடிதண்ணீர் வழங்கும் மூன்றாவது குடிநீர் திட்டத்தை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் தற்போது முன்னேற்ற நிலையில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டமானது 30—6—1994-க்குள் முடிக்கப்பெற்று பயனுக்குக் கொண்டு வரும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர், நீங்களே, குடிநீர் வடிகால் வாரியத் தலைவர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நீண்ட காலத்திற்கு முன்பாக கேட்கப்பட்ட கேள்வி. இன்று உள்ள அந்தக் குடிநீர் திட்டம், இரண்டாண்டுகளுக்கு முன்பாக விழா நடத்தி, என்னால் துவக்கப்பட்டு, கிட்டத்தட்ட இரண்டாண்டுகளிலே முற்றுப் பெற்றிருக்கிறது. அது 11 கோடி ரூபாய்த் திட்டம். இன்றைக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தலைமையிலே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பாக, அத்தனைக் குடிநீர் திட்டங்களும் போர்க்கால அடிப்படையிலே, புயல் வேகத்தில் நடைபெற்று வருகின்றன என்பதற்கு இந்த பொள்ளாச்சி குடிநீர் திட்டம் ஒன்றே சான்று என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.